**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, NAGERCOIL.**
**Case Number: CC.330/2022**
**PW:8**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சதீஷ்குமார் | LW | : 9 |
| Father's / Husband Name | : திரு.பாஸ்கரன் | Occupation | : உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Village | : | | |
| Taluk | : | Age | : 62 |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 r/w RULE 35 OF CRIMINAL RULES OF PRACTICE 2019 THE DAY OF 04.08.2026**
**(எதிரிகள் ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டது)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**-

1. நான் தற்போது குழந்தைகள் மற்றும் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது 2024ம் வருடம் ஓய்வு பெற்று பார்வதிபுரத்தில் வசித்து வருகிறேன். நான் நேசமணிநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது நேசமணிநகர் காவல் நிலைய தலைமைக்காவலர் அய்யாகுமார் என்பவர் பதிவு செய்த நிலைய குற்ற எண் 74/2021 இதசபிரிவு 294(பி), 342, 324, 506(2) ன்கீழ் உள்ள வழக்கை அன்றயை தினம் 01.03.2021ம் தேதி என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான கோல்டன் தெரு, புஷ்பம் மோகன் டிரைவிங் பள்ளி சென்று சாட்சிகள் செல்வ சிவராஜ் மற்றும் அற்புதராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேலும் அவர்கள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

2. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மணிகண்டன், தமிழ் செல்வி, பத்மா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்த தலைமைக்காவலர் அய்யாகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை பல இடங்களில் தேடி சென்றபோது எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிளை பெற்று பிணையில் சென்றால் அவர்களை கைது செய்ய அவசியம் எழவில்லை. நான் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்து சென்றுவிட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. வரைபடத்தை நான் தான் வரைந்தேன். எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நகலில் சம்பவ இடம் எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள்சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றும் அதேபோல் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் காயம்பட்ட நபர் மற்றும் அவருடைய தாயாரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)-இரா.சத்தியமூர்த்தி,

குற்றவியல் நடுவர் எண்.2

நாகர்கோவில்